**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்.**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்

2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 06-ம் நாள் சனிக்கிழமை

**CC.No. 10/2023**

**C.N.R.No: TNDG18-002529-2022**

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | District Munsif Cum Judicial Magistrate Court, Athoor. |
| 2. | Name of the Judge | Thiru. S. Anbuthasan, B.Com., B.L. |
| 3 | Date of Judgment | 06.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | **CC.No. 10/2023**<br>**C.N.R.No: TNDG18-002529-2022** |
| 5. | Name of the Parties of the case | Sub Inspector of Police, Chinnalapatti– **Complainant**<br>**Accused – Rajaram** |
| 6. | Date of Occurence | 18.11.2017 |
| 7. | Date of Complaint | 18.11.2017 |
| 8. | Date of Arrest if any and remand | -- |
| 9. | Period of Remand of the Accused | -- |
| 10. | Date if release on bail | Station Bail |
| 11. | Date of Final Report | 28.03.2018 |
| 12. | Date of Committal of the case to the Court of Sessions | - |
| 13. | Date of Questioning of the accused U/s. 263 BNSS | 03.07.2025 |
| 14. | Date of Examination in Chief and Cross Examination of the witnesses | Witnesses \| Chief \| Cross |

| | | |
|---|---|---|
| | | PW 1 \| 24.03.2026 \| 24.03.2026<br>PW 2 \| 26.03.2026 \| 26.03.2026<br>PW 3 \| 26.03.2026 \| 26.03.2026<br>PW 4 \| 07.04.2026 \| 07.04.2026<br>PW 5 \| 21.05.2026 \| 21.05.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior courts except routine petitions like petition U/s. 317 of the code | Nil |
| 16. | Date of Examination of the Accused U/s. 351(1)(b) B.N.S of the Code | 03.07.2025 |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil |
| 18. | Grant of Stay by Superior courts and the results there of | -- |
| 19. | Date of Commencement of Trial | 03.07.2025 |
| 20. | Date of Closure of Trial | 26.05.2026 |
| 21. | Date of Sentence of Order | 06.06.2026 |
| 22. | Date of Service of Copy of Judgment to the Accused | Does not arise |
| 23. | If any delay, give Explanation | -- |

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
சின்னாளபட்டி,
காவல் நிலைய குற்ற எண். 319/2017 .... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

ராஜாராம்,
த.பெ. பொன்னுசாமி,
17-5-101-செக்காபட்டி, மெயின் ரோடு,
சின்னாளபட்டி. ..... குற்றம் சாட்டப்பட்டவ

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 05.01.2023 அன்று CC.No. 10/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 26.05.2026–ஆம் தேதியன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் திரு. முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் செல்வி. G.தனலட்சுமி, திரு. D. இளவரசன் ஆகியோர்கள் ஆஜராகிய நிலையில், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தில் சீரிய மேற்பார்வையில் நிலுவையிலிருந்து வந்த இவ்வழக்கின் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பின்பு, இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.......

## <u>தீர்ப்புரை</u>

**1) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u> :**

i. கடந்த 18.11.2017 அன்று 14.00 மணிக்கு சின்னாளபட்டி, செக்காபட்டி திலகம் துவக்கப்பள்ளி அருகே உள்ள எதிா என்பவர் தனது பெட்டிக்கடை முன்பு நின்றிருந்த பள்ளி சிறார் மாணவர்களுக்கு அரசால் தடைசெய்யப்பட்ட கணேஷ் புகையிலை பாக்கெட்டை கொடுத்து விற்பனை செய்த குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவு பிரிவு.6, 24(1) COTPA Act 2003, 77 The Juvenile Justice Act–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக சின்னாளபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து குற்றம் சாட்டப்பட்டவர் மீது குவிமுச சட்டப்பிரிவு **173(2)**–இன் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

ii. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது CC.No.10/2023 ஆக இந்நீதிமன்றத்தில் 05.01.2023 அன்று கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி பிணையில் இருந்ததால் அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றம்சாட்டப்பட்டவருக்கு சட்டபிரிவு குவிமுச பிரிவு 207– ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

iii. குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்க போதிய சந்தர்ப்பமும் காலமும் வழங்கப்பட்டு, இவ்வழக்கின் குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து சட்டப்பிரிவு பிரிவு.6(a) r/w 24(1) COTPA Act 2003, 77 The Juvenile Justice Act–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து சட்டப்பிரிவு **251 Cr.P.C–இன் கீழ்**மேற்படி குற்றச்சாட்டுக்கள் குறித்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு விளக்கி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்தார்.

iv. அரசுத் தரப்பில் பட்டியல் சாட்சி 1 ஆன சார்பு ஆய்வாளர் ஓய்வு திரு. திலீப் சிங் அவர்கள் அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டது. பட்டியல் சாட்சி 3 என்பவரை அ.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.2 ஆவணம் குறியீடு செய்யப்பட்டது. பட்டியல் சாட்சி 4 என்பவரை அ.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.3 ஆவணம் குறியீடு செய்யப்பட்டது. பட்டியல் சாட்சி 2 ஆன தலைமைக்காவலர், திண்டுக்கல் மதுவிலக்கு அமலாக்கப்பரிவு திரு.K.ராஜா என்பவரை அ.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.4 ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது. பட்டியல் சாட்சி 5 ஆன சார்பு ஆய்வாளர், மதுரை மாநகர SI என்பவரை அ.சா.5 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறிப்பிடப்பட்டன.

**(2) <u>அரசுத் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்</u>**

i. அ.சா.1 ஆன சார்பு ஆய்வாளர் ஓய்வு திரு. திலீப் சிங் என்பவர் தனது சாட்சியத்தில், "கடந்த 17.11.2017 அன்று ரோந்து பணியில் இருந்தபோது,சின்னாளபட்டி, சொக்காபட்டி திலகம் துவக்கபள்ளி அருகில் எதிரி ராஜாராம் அரசு அனுமதி இன்றி சிறுவர்களுக்கு புகையிலை பொருட்கள் விற்பனை செய்ததை கண்டறிந்து, அவரிடமிருந்து 34 புகையிலை பாக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும், அதற்கான அத்தாட்சியில் தாம் கையொப்பமிட்டதாகவும் தெரிவித்துள்ளார். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும்(அ.சா.ஆ.1/PW.1) ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரி மீது சின்னாளபட்டி காவல் நிலைய குற்ற எண் 319/2017–இல் COTPA Act பிரிவு 6 r/w 24 கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது" என்று சாட்சியமளித்துள்ளார்.

ii. பார்வைமகசர் சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 தமது சாட்சியத்தில், "எங்களிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள சாட்சிகளாக போடப்பட்டுள்ள கையொப்பங்கள் எங்களுடையது தான். பார்வைமகசரில் உள்ள கையொப்பங்கள் மட்டும் **(அ.சா.ஆ.2/PW.2), (அ.சா.ஆ.3/PW.3)** ஆக குறியீடு செய்யப்படுகின்றன" என்று சாட்சியமளித்துள்ளார்.

iii. அ.சா.4 ஆன தலைமை காவலர் திரு. K.ராஜா என்பவர் தனது சாட்சியத்தில், "கடந்த 17.11.2017 அன்று ரோந்து பணியில் இருந்தபோது, சின்னாளபட்டி, சொக்காபட்டி திலகம் துவக்கபள்ளி அருகில் எதிரி ராஜாராம் அரசு அனுமதி இன்றி சிறுவர்களுக்கு புகையிலை பொருட்கள் விற்பனை செய்ததை கண்டறிந்து, அவரிடமிருந்து 34 புகையிலை பாக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும், அதற்கான அத்தாட்சியில் தாம் கையொப்பமிட்டதாகவும் தெரிவித்துள்ளார். அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம்

மட்டும்(அ.சா.ஆ.4/PW.4) ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரி மீது சின்னாளபட்டி காவல் நிலைய குற்ற எண் 319/2017–இல் COTPA Act பிரிவு 6 r/w 24 கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது " என்று சாட்சியமளித்துள்ளார்.

iv. இவ்வழக்கில் அ.சா.5 ஆன சார்பு ஆய்வாளர் திரு. சோலைராஜ் என்பவர் தனது சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் திரு. சரவணன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, கடந்த 30.03.2025 அன்று 14.00 மணிக்கு எதிரி மீது குற்ற எண்.319/2017 சட்டபிரிவுகள் 6 r/w 24(1) COTPA Act மற்றும் பிரிவு.77 JJ Act ன் படி  தானாக முன் வந்து நானே அன்றையதினம் 16.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களை சேகரித்தும், LW1 முதல் LW4 சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்பு எதிரி மீது குற்றம் புலனானதால் எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

v. அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக உள்ள மேற்படி குற்றத்திற்கு உட்படுத்தக்கூடிய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து குற்றம்சாட்டப்பட்டவர் குவிமுச பிரிவு.313(1)(b)–இன் கீழ் விளக்கி வினவியபோது, குற்றஞ்சாட்டப்பட்டவர் பொய்சாட்சி என்று மறுத்துக் கூறினார். குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது தரப்பில் சாட்சிகள் இல்லையென்று கூறினார். எனவே குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் வாய்மொழி சாட்சிகள் இல்லையென்று குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு வழக்கறிஞரால்

மேலொப்பம் செய்யப்பட்டதன் பேரில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு வாய்மொழி சாட்சியம் முடிக்கப்பட்டது.

**vi.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்?

**குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சட்டப்பிரிவுகள் 6(a) r/w 24(1) COTPA Act மற்றும் பிரிவு.77 JJ Act–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?" என்பதேயாகும்.**

**(3) <u>தீர்வு</u>**

i) கடந்த 01.09.2022–ம் தேதி பிரிவு.86(4) JJ Act–ல் வந்த சட்டத்திருத்ததிற்கு பிறகு தான் இந்த சட்டத்தின் கீழ் குற்றமாக கருதப்படும் இந்த வழக்குகள் அனைத்தும் சிறார் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கானது அதன் குற்ற எண். 319/2017 ஆகும். எனவே, பிரிவு.86(4) JJ Act–ல் மேற்சொன்ன சட்டதிருத்தம் வருவதற்கு முன்பே இவ்வழக்கு சம்பவம் நிகழ்ந்துள்ளதால் இந்த வழக்கை விசாரிப்பதற்கான ஆள்வரை அதிகார வரம்பு இந்நீதிமன்றத்திற்கு உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

ii) முதல் தகவல் அறிக்கையில் செக்காபட்டி, திலகம் துவக்கப்பள்ளி அருகில் உள்ள ராஜாராம் பெட்டிக்கடையில் 18.11.2017 அன்று மதியம் 01.00 மணி போல இவ்வழக்கின் எதிரி தனக்கு முன்பு நின்றிருந்த பள்ளி சிறார் மாணவர்களுக்கு புகையிலை பாக்கெட்டுகளை கொடுத்து விற்பனை செய்து கொண்டிருந்தார். போலிசை கண்டதும் பள்ளி சிறார் மாணவர்கள் தங்களது

கையில் வைத்திருந்த புகையிலை பாக்கெட்டுகளை கடைக்கு முன்பு கீழே தரையில் போட்டுவிட்டு வீடுகள் இருக்கும் பகுதிக்குள் சென்றுவிட்டார்கள் என்று கூறியுள்ள நிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5–ஐ குறுக்கு விசாரணை செய்யும்போது,

**திலகம் பள்ளி 5ம் வகுப்பு வரையுள்ள பள்ளி என்றால் சரிதான். பள்ளி நடந்து கொண்டிருந்த நேரம் என்றால் சரிதான். பள்ளி சிறார்களுக்கு என்ன வயது இருக்கும் என்றால் 10 வயதுக்கு மேல் 18 வயதுக்குள் இருக்கும்**

என்று சாட்சியம் அளித்துள்ளார். திலகம் பள்ளியில் 5ம் வகுப்பு வரை உள்ள நிலையில், அங்கு 10வயதுக்குட்பட்ட மாணவர்கள் தான் படிப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் சம்பவஇடத்திலிருந்த பள்ளி சிறார்களுக்கு 10 வயதுக்கு மேல் 18 வயதுக்குள் இருக்கும் என்று சாட்சியம் அளித்துள்ளதால், அரசு தரப்பு வழக்கு முழுமையாக நம்பத்தகுந்த விதத்தில் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. திலகம் துவக்கப்பள்ளி எந்த இடத்தில் உள்ளது என்று வரைபடத்தில் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, சம்பவஇடத்திற்கும், திலகம் பள்ளிக்கும் 100மீட்டர் இடைவெளி தான் இருக்கும் என்பதை அரசு தரப்பில் வரைபடத்தின் மூலமும் அதை ஒத்துரைக்கும் பார்வைமகசர் மூலமும் அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி மேற்சொன்ன பிரிவின் சட்டஉட்கூறுவுக்குட்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

Iii) புலன் விசாரணை அதிகாரி தன்னுடைய குறுக்கு விசாரணையில்,

**ராஜாராம் கடை அருகே உள்ள நபர்களிடம் சாட்சியாக இருக்க சொல்லி நீங்கள் கேட்கவில்லை என்றால் நாங்கள் கேட்டோம் அவர்கள் மறுத்துவிட்டார்கள். நீங்கள் கேட்டதாகவும் அவர்கள் மறுத்ததுவிட்டார்கள் என்பதையும்**

| |
|---|
| **உங்களுடைய இறுதியறிக்கையில் கூறியுள்ளீர்களா என்றால் இல்லை** |

என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே, சம்பவஇடத்திலிருந்த தனி நபர் சாட்சிகளை விசாரித்து அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

iv) **சம்பவ இடத்திலிருந்து திலகம் பள்ளி எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100மீட்டர் இருக்கும்** என்று அ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.4 தன்னுடைய குறுக்கு விசாரணையில், **சம்பவஇடத்திற்கும், திலகம் துவக்கபள்ளிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 300 அடி இருக்கும்** என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால், சம்பவஇடத்திலிருந்து பள்ளி 100மீட்டர் இடைவெளியில் தான் அமைந்துள்ளது என்பை அரசு தரப்பில் சந்தேகத்திற்குஇடமின்றி நிரூபிக்கவில்லை.

v) இவ்வழக்கில் பார்வைமகசர் சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களுடைய முதல் விசாரணையில் **பார்வைமகசரில் உள்ள கையொப்பத்தை ஒப்புக்கொண்டு அந்த கையொப்பங்களை காவல்நிலையத்தில் வைத்துதான் செய்து கொடுத்தோம்** என்று சாட்சியம் அளித்துள்ளதால், பார்வைமகசர் சாட்சியத்தின் மூலம் சம்பவஇடத்திற்கு புலன் விசாரணை அதிகாரி சென்று பார்வைமகசர், மாதிரிவரைபடம் தயார் செய்தார் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்குஇடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

vi) பள்ளியில் காம்பவுண்டு சுவர் மற்றும் வாட்ச்மேன் இருந்துள்ளார்கள் என்று கூறியுள்ள நிலையில், பள்ளிக்கு வெளியில் வந்து மாணவர்கள் புகையிலை வாங்கினார்கள் என்று கூறுவது நம்பத்தகுந்த

விதத்தில் இல்லை. மேலும், சம்பவ இடத்தின் அருகில் திலகம் துவக்கபள்ளி மட்டுமே உள்ளது என்று கூறியுள்ள நிலையில், அந்த பள்ளியில் 10–லிருந்து 18 வரையுள்ள பள்ளி மாணவர்கள் இருந்திருக்க வாய்ப்பில்லை. சம்பவஇடத்திலிருந்த பார்வைமகசர் சாட்சிகள் யாரும் அரசு தரப்பு வழக்கை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை. தனிநபர் சாட்சி யாரையும் இவ்வழக்கில் ஒரு சாட்சியாக விசாரிக்கவில்லை என்பதாலும், அரசு தரப்பு வழக்கை அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் இந்நீதிமன்றத்தின் முன்பு குற்றசாட்டின் சட்டஉட்கூறுவுக்குட்பட்டு சந்தேகத்திற்குஇடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

vii) எனவே, இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் **பிரிவு.6(a) r/w 24(1) Cotpa act மற்றும் 77 JJ Act–ன் படியும் குற்றவாளி இல்லை** என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, இவ்வழக்கின் குற்றம்சாட்டப்பட்டவரை குவிமுச பிரிவு.248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

viii)இவ்வழக்கின் தன்மையை கருதி, பிரிவு357–A(1) –ன் படி இவ்வழக்கில் மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழுவிற்கு இழப்பீட்டிற்காக பரிந்துரை செய்ய வேண்டியதில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இவ்வழக்கில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.III நீதிமன்றத்தில் உள்ள வழக்குச்சொத்தான R.P.R.No. 15/2018 இல் Warning tobacco causes mouth cancer ganesh tobacco – 34 பாக்கெட்டுகளை மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் உரிய முறையில் அழித்துவிட உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு

சொல்லப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 06 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.04 15:52:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்

**அரசுத் தரப்புச் சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. திலீப் சிங் (சார்பு ஆய்வாளர் ஓய்வு) |
| அ.சா.2 | திரு. சண்முகம் (பார்வைமகசர் சாட்சி) |
| அ.சா.3 | திரு. மணிகண்டன் (பார்வைமகசர் சாட்சி) |
| அ.சா.4 | திரு.K.ராஜா (தலைமை காவலர், திண்டுக்கல் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு) |
| அ.சா.5 | திரு. சோலைராஜ்(சார்பு ஆய்வாளர்) |

**Judicial Form No : 68**

| Sl.No. | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் | 24.03.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | பார்வைமகசரில் உள்ள முதலாவது கையொப்பம் | 26.03.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.2 | அசல் |
| 3. | பார்வைமகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் | 26.03.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.3 | அசல் |
| 4. | அத்தாட்சியில் உள்ள இரண்டாவது | 07.04.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.4 | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கையொப்பம் | | | | |
| 5. | அத்தாட்சி | 21.05.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.5 | அசல் |
| 6. | முதல் தகவல் அறிக்கை | 21.05.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.5 | அசல் |
| 7. | பார்வைமகசர் | 21.05.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.5 | அசல் |
| 8. | மாதிரிவரைபடம் | 21.05.2026 | அ.சா.ஆ.8 | அ.சா.5 | அசல் |
| 9. | படிவம் 91 | 21.05.2026 | அ.சா.ஆ.9 | அ.சா.5 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப்பொருள் –**

இல்லை

**குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள் –**

இல்லை

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.04 15:52:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்

குறிப்பு:–

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2) சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3) தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.